# சிறுதெய்வ வழிபாடும் விழாக்களும்

*முனைவர் கரு. முருகன்*
இணைப் பேராசிரியர், ஆய்வாளர், தமிழ் உயராய்வு மையம்
ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரி, தேவகோட்டை

*சி. தவமணி*
பகுதிநேர முனைவர் பட்ட, தமிழ் உயராய்வு மையம்
ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரி, தேவகோட்டை

**மலர்: 11**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: ஏப்ரல்**

**வருடம்: 2024**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS1-April.7725

## முன்னுரை

வழிபாடு என்பது மக்கள் குறைகளை கூறி அவை யாவும் மாறவும் வரங்கள் வேண்டவும் உதவுதாகும். நாம் எப்பொழுதும் ஒரு செயலை தொடங்க வேண்டும் என்றாலும், இறைவனை வேண்டி செயலை செய்ய தொடங்கினால் அவை எவ்வித தடங்களும் இன்றி நிகழும் என்பது மக்களின் நம்பிக்கையாகும். வழிபாடு என்பது நாள்சு வழிபாடு, வார வழிபாடு, மாத வழிபாடு, ஆண்டு வழிபாடு, தனி வழிபாடு, கூட்டு வழிபாடு என பல வகைப்படும். அருள்மிகு மகாமாரியம்மன் கோயிலில் நடைபெறும் வழிபாடு, விழாக்கள் பற்றி அறிவது இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

## மகாமாரியம்மன் வழிபாடு

மனிதனைப் போல் வழிபாடு தொன்மையானது. உலகில் மனிதன் தோன்றிய நாள் முதல் அவன் வாழ்வில் இன்றியமையாத இடத்தை வகுப்பன தெய்வங்கள் ஆகும். மனிதனது அச்ச உணர்வில் இருந்தும், குற்ற உணர்ச்சியிலிருந்தும் வழிபாடு தோன்றியது என கூறுவர். பண்டைய மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வை கொண்டு வாழ்ந்து வந்தனர். தங்களுக்கு பாதிப்பு ஏற்படுத்திய இயற்கையினை வழிபட தொடங்கினர. நிலம், நீர் தீ, மழை, மரம், பாம்பு, வலி என இவற்றை தெய்வங்களாக நினைத்து வழிபட்டால் அவை தங்களுக்கு நன்மை செய்யும் என நம்பினர். எனவே அத்தெய்வங்களுக்கு விழாக்களும் எடுத்தனர்.

செல்வம் மற்றும் உயர்ந்த நிலையில் உள்ள மக்கள் வழிபடும் சிவன், திருமால், முருகன் முதலிய தெய்வங்களை பெருந்தெய்வம் என்றும், சமுதாயத்தில் பின்தங்கியுள்ள மக்கள் பழங்குடி மக்கள் முதலியோர் வழிபடும் தெய்வங்களை சிறுதெய்வம் என்றும் கூறும் மரபு எழுந்துள்ளது.

தெய்வங்களில் பெருமை, சிறுமை இல்லை என்றும், வழிபாடும், மக்கள் நிலையும், வைதீக அமைப்பும், சமய தொடர்பும் அமைந்ததுள்ளது எனக் கூறுவது மரபாகிவிட்டது. சிறுதெய்வங்கள் பல காலத்தால் பழமையான தெய்வங்களாக உள்ளன.

தெய்வ வழிபாட்டை சிறுதெய்வத்தோடு தொடர்புடைய வழிபாடு என்றும், பெருந்தெய்வத்தோடு தொடர்புடைய வழிபாடு என்றும் பகுப்பர். வழிபாட்டு மரபில் சிறுதெய்வ வழிபாடு, பெருந்தெய்வ வழிபாடு என்ற இரு முறைகள் இடம் பெறுகின்றன. பெருந்தெய்வ வழிபாடு சிவன் திருமால் கொண்ட தெய்வங்களை வழிபடும் ஆகம விதி சார்ந்த வழிபாடாகும். இவ்வழிபாடு உயிர்கொலை நீக்கிய நிலையில் அமையும்.

“சிறுதெய்வ வழிபாடு நாட்டுப்புற பண்பாட்டில் காணக் கூடியதாகும் சிறு தெய்வங்களை கிராமப்புற தெய்வங்கள் என்றும், நாட்டுப்புற தெய்வங்கள் என்றும் பல பெயர்களால் வழங்குவதுண்டு. இதில் உயிர்ப்பலி உண்டு. ஆலயங்களில் நடைபெறும் வழிபாட்டினை நித்தியம், நைமித்தியம், காமியம் என மூன்றாகப் பகுத்து கூறுகிறது என்பர்.

சிறுதெய்வ வழிபாடு என்பது இம்மை நலத்தை மட்டும் நோக்கி இன்ப காலத்திலும், துன்ப காலத்திலும் தனக்கு எவ்வித தீங்கும் வராதபடி ஐம்புதங்கள், ஆவிகள் போன்ற சிறுதெய்வங்களுக்கு உணவு படைத்தும், பழியினை கொடுத்தும் வழிபடுவதாகும் என்பர்.

வாழ்க்கை தேவையால் வாழ்க்கை முறையில் இருந்து வழிபாடு தோன்றியது என்று கூறலாம். வழிபடு தெய்வங்கள் வழிபடுவோரின் வாழ்க்கை முறையிலிருந்து எழுகின்றன என்பர் நாகப்ப நாச்சியப்பன்.

## பூசை முறைகள்

பூசை என்றால் அனைத்து சிறுதெய்வ கோயில்களிலும் காலை புசை, மாலை புசை என இரண்டு கால புசைகள் நடைபெறும். காலை புசையின் போது புசாரி தூய நீரில் நீராடி, நெற்றியில் திருநீறு புசி, தூய ஆடைகள் அணிந்து கோயிலுக்கு வந்து மாரியம்மனுக்கு புசை செய்வார். அப்பொழுது தீப தூப ஆதாரணைகள் நடைபெறும். புசையின் போது சர்க்கரைப் பொங்கல் நெய்வேத்தியமாக படைக்கப்படும். கோயிலுக்கு வருகை தரும் பக்தர்கள் கொண்டு வரும் பால், தயிர், இளநீர், சந்தனம் போன்றவை அபிடேகம் செய்யப்பெறும்.

மாலை புசையின் போது ஒவ்வொரு நாளும் மாலை **6** மணி அளவில் மாரியம்மனுக்கு தீப தூப ஆதாரணைகளும், நைவேத்தியமும் படைக்கப்படும்.

நித்திய புசை என்பது நாள்தோறும் செய்யும் புசை முறையாகும். நித்திய புசை வழிபாட்டினை நாள் வழிபாடு என்று கூறுவர். நைமித்சுதிய புசை என்பது ஒரு குறிப்பிட்ட தெய்வத்திற்கு உரிய குறிப்பிட்ட படையல் பொருட்களெல்லாம் கொண்டு வழிபடுவது நைமித்திய புசை ஆகும். இதனை புண்ணிய காலங்களில் செய்வர். இவ்வழிபாட்டு சிறப்பு வழிபாடு என்று கூறுவர். காமிய புசை என்பது தனிப்பட்டவரின் விருப்பம் நிறைவேற செய்யும் வழிபாடு காமிய புசையாகும். திருக்கோயில்களின் நிகழும் வழிபாடு, விழாக்கள் குறித்து ஆகம நூல்கள் விரிவாக கூறுகின்றன. மனிதன் மனமொன்றி இறைவனை வழிபடுவது கூடிய இடம் ஆலயம் ஆகும். ஆன்மா லயிக்கும் இடம் ஆலயம் என்பர். வழிபாட்டுமுறை கோயிலின் பொருளாதார நிலைக்கு ஏற்ப விரிந்தும், சுருங்கியும் அமையும்.

## நாள் வழிபாடு

நாள் வழிபாடு என்பது தினந்தோறும் நிகழும் வழிபாடாகும். சிறுதெய்வ கோயில்களில் வழிபாட்டில் ஒருவேளை அல்லது செவ்வாய் வெள்ளிக்கிழமையில் வருடத்தில் ஏதாவது ஒருநாள் என்ற

நிலையில் வழிபாடுகள் நடைபெறுவது வழக்கமாக இருக்கிறது. அருள்மிகு மகாமாரியம்மன் கோவிலில் ஒரு நாளைக்கு ஒருகால புஜை நடைபெறும். குறிப்பிட்ட நேரத்தில் என்றில்லாது எப்பொழுதாவது ஒரு நேரத்தில் செய்யப்படுகிறது. அப்பொழுது மகாமாரியம்மனுக்கு அபிடேகம் நடைபெறும். பின் அலங்காரம் தீப தூப ஆராதனைகள் செய்யப்படுகின்றன.

### விழாக்கள்

**"விழா" என்பது "விழவு" என்ற சொல்லின் திரிபாகும்.**

**"விழவும் உழந்தன்று முழவுந் தூங்கின்று"**
**(நற்றிணை 320)**

எனப் பண்டைய காலத்தில் நடந்த விழவு பற்றி நற்றினை சுட்டுகிறது.

பண்டைக் காலத்திலேயே விழாக்கள் நடந்திருக்கின்றன என்பதற்குச் சான்றாகப் பல இலக்கியங்களைக் காட்டலாம். சிலப்பதிகாரத்தில் இந்திரனுக்கு எடுத்த விழா பற்றி "இந்திரவிழவு ஊர் எடுத்த காதையில்" சுட்டப்படுகிறது. மணிமேகலை இத்திருவிழா பற்றி விழாவறை காதையில் கூறப்படுகிறது.

விழா என்பது "விழை" என்ற அடிச் சொல்லில் உருவானதாகும். இதற்கு விருப்பு, அன்பு செலுத்து என்ற பொருளாகும். விழாவைக் கொண்டாட்டம் என்றும்

"இவ்வுலகில் வாழகின்ற மக்கள் இம்மை இன்பமும், மறுமை இன்பமும் எளிதில் பெற்றுத் தமக்கு இறைவன் அளித்த பிறவியைத்தூயதாக்கிக்கொள்வதற்காகவே இறையோடுதொடர்புடையதிருவிழாக்கள் நிகழ்த்தப்படுகின்றன"" எனக்கூறுவர். மதக் கொள்கைகளை இறவாமல் காப்பதற்கும் விழாக்கள் கொண்டாடப்படுகின்றன.

### சிறப்பு வழிபாடு

"சிறப்பு வழிபாட்டினைத் தவிர வழிபாடு, பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை மேற்கொள்ளும் வழிபாடு, ஆண்டு வழிபாடு, குடமுழுக்கு வழிபாடு"" என்று பலவகை வழிபாட்டினைப் பற்றித் தேனப்பன் கூறுவர். சிறப்பு வழிபாடு என்பது குறிப்பிட்ட காலங்களில் நடத்தப்பெறும் புசையாகும்.

அருள்மிகு மகாமாரியம்மன் கோவிலில் சிவராத்திரி, தைப்பொங்கல், சித்திரை வருடப்பிறப்பு, பௌர்ணமி விழா, மார்கழி மாத திருப்பள்ளியெழுச்சி, விநாயகர் சதுர்த்தி போன்ற நாட்களில் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன.

### சித்திரை வருட பிறப்பு

சித்திரை மாதம் முதல் தேதி தமிழ் வருடம் பிறக்கிறது. தமிழ் வருடம் சித்திரையில் தூங்குவதால் இதனை சித்திர வருட பிறப்பு என்று அழைப்பர். அன்று சிறப்பு புஜை அம்மனுக்கு நடைபெறும். வருடம் முழுவதும் நலமாக அமைய அம்மனை வேண்டி வணங்குவர்.

### மார்கழி திருவிழா

பண்டைய காலத்தில் அரசனும் அரசியும் துயில் கொள்ளும் போது காலையில் பாணர்களோ அல்லது புலவர்களோ இவர்களை துயில் எழுப்புவார்கள். இதனை நாளடைவில் இறைவனுக்கும் பின்பற்றினர். அருள்மிகு மகாமாரியம்மன் கோயிலில் திருப்பள்ளி எழுச்சி மார்கழி மாதம் 30 நாட்களும் கொண்டாடப்படுகிறது, அம்மனுக்கு எண்ணெய் காப்பு சாத்துதல், அபிஷேக ஆராதனை செய்தல் போன்றவற்றை நிகழ்த்தி பின் பொங்கல் படைத்து வழிபடுவர். புசை நிகழ்த்தி பின்பு பிரசாதம் பக்தர்களுக்கு வழங்கப்படும் .

### அக்னி நட்சத்திரம்

சித்திரை மாதம் இவ்வழிபாடு நிகழ்த்தப்படுகிறது. அக்னி நட்சத்திரம் தொடங்கிவிட்டால் சுரியனின் வெப்பம் அதிகரிக்கும். சுரிய வெப்பத்தை தணிக்க,

*புதுபானையில் நீர் நிறைத்து தண்ணீர் சொட்டு சொட்டாக அம்மன் மீது விழும்படி அமைத்திருப்பர். அம்மனுக்கு குளிர்ச்சி ஊட்டுவதற்காக இவ்வழிபாடு செய்யப்படுகிறது என்பர். மக்கள் வெட்ப நோயிலிருந்து காக்கப்படுவர் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் இவ்வழிபாடு நிகழ்த்தப்படுகிறது. இவ்வழிபாடு காலத்தில் காலை, மாலை என இருவேளைகளில் இரண்டு கால புசை நடைபெறும்.*

### பங்குனி செவ்வாய்

*மகாமாரியம்மனுக்கு பங்குனி மாதம் முதல் செவ்வாய் காப்பு கட்டி இரண்டாம் செவ்வாய் திருவிழா நடைபெறும். எட்டு நாட்களும் அம்மனுக்கு அலங்காரம் நடைபெறும். இரவு 10 மணி அளவில் அம்மன் வாசலில் கும்மியடி நிகழ்வு நடைபெறும். திருவிழா அன்று காலை 7:00 மணி அளவில் பால்குடம் எடுத்து வருவர். அதன்பின் ஊர்மக்கள் அனைவரும் ஒன்று கூடி பொங்கல் வைப்பர். பின் அம்மனுக்கு ஆடு, கோழி பலியிடுவர். மாலை புத்தட்டு நிகழ்ச்சி நடைபெறும். இரவு அம்மனுக்கு பின்புறம் உள்ள மேடையில் கலை நிகழ்ச்சி கள் நடைபெறும்.*

### முடிவுரை

*மனிதனை பக்குவப்படுத்துவது சமயம் ஆகும். நெறிப்படுத்துவது வழிபாடாகும். இத்தகைய வழிபாடுகள் செய்யத்தகுந்த கோயில்கள் சமுதாயத்தில் முக்கிய இடம் பெறுகின்றன. அவற்றுள் சிறுதெய்வ கோயிலில் ஒன்றான அருள்மிகு மகாமாரியம்மன் கோவிலில் நடைபெறும் வழிபாடுகள், விழாக்கள் பற்றி இக்கட்டுரை எடுத்துரைக்கின்றது.*